# நடுவணரசா? நத்தையா?

‘அசையவே மாட்டேன்’ என்கிறது நடுவண் அரசு.

விலைவாசிகள் விண்ணைத் தாண்டிப் பறக்கின்றன. நடுத்தர மக்கள் சோறாக்கி, வெறும் ரசம் வைப்பதற்கே படாத பாடுபடுகிறார்கள். பருப்பு போட்டுக் குழம்பு வைப்பதெல்லாம் இனி பொய்யாய், பழங்கதையாய்ப் போய்விடுமோ என்று பயமாக இருக்கிறது.

நடுவண் அரசோ, விலைவாசியைக் குறைக்க எந்த நடவடிக்கையும் எடுப்பதாகத் தெரியவில்லை. ‘விவாதிக்கத் தயார்’ என்கிறது. விவாதம் செய்துகொண்டிருந்தால் விலைவாசி குறையுமா?

‘பயங்கரவாதச் செயலைத் தடுக்கும் அளவுக்கு உளவுத்துறை உஷார் படுத்தப்பட்டுள்ளது’என்று உள்துறை அமைச்சர் சொல்லி முடிப்பதற்குள் குண்டுகள் வெடிக்கின்றன.

இந்தக் குண்டுவெடிப்புகளுக்குப் பின்னால் இந்துத்துவ பாசிச சக்திகளின் கை இருக்கிறது என்று ‘தி ஹிந்து’ முதல் மராட்டிய மாநில முன்னாள் ஐ. ஜி வரை பலரும் கூறிவருகிறார்கள். ஆனால் நமது உள்துறையோ பாகிஸ்தான் பல்லவியைப் பாடிக் கொண்டு ‘தேமே’ என்று உட்கார்ந்திருக்கிறது.

கர்நாடகம், மராட்டியம் போன்ற மாநிலங்களில் வெளிப்படையாகவே தேசிய ஒருமைப் பாட்டுக்கு எதிரான செயல்கள் நடக்கின்றன. சட்டமன்றத்தில் தேசிய மொழியான இந்தியில் பேசினாலே அடி விழுகிறது. தட்டிக் கேட்கவோ தடுத்து நிறுத்தவோ யாரும் இல்லை.

ஜெய்ராம் ரமேஷ் என்று ஓர் அமைச்சர். முதல் நாள் பி.டி. கத்தரிக்காய்க்கு அனுமதி இல்லை என்கிறார். மறுநாளே ‘அனுமதி உண்டு’ என்கிறார். இன்னொரு நாள், கத்தரிக்காய்க்குத்தான் தடை; பி.டி. முட்டைக்கோசுக்கும் வெண்டைக்காய்க்கும் அனுமதி உண்டு’ என்கிறார். விளக்கெண்ணெய் அமைச்சர்.

மற்ற நாடுகளில் தொடர்வண்டிகள் காற்றைக் கிழித்துக் கொண்டு மணிக்கு 300 மைல் வேகத்தில் பறக்கின்றன. உண்மையிலேயே ‘பறக்கும் ரயில்கள்.’ ஆனால் நம்ம ஊர் தொடர் வண்டித் துறை அதிகாரிகள் இன்னும் ரயில் பெட்டிகளில் கரப்பானையும் எலியையும் ஒழிப்பது பற்றியும் படுக்கை விரிப்புகள் பற்றியுமே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

கல்வியும் மருத்துவமும் ஏழைகளுக்கு எட்டாக் கனிகள் ஆகி விட்டன.

எந்த ஒரு துறையிலும் ஆக்கபூர்வமான எந்த ஒரு நடவடிக்கையும் காணோம்.

ஒவ்வொரு நாளும் மக்களின் துயரங்கள் அதிகமாகிக் கொண்டே போகின்றனவே தவிர குறைந்தபாடில்லை.

மத்தியில் ‘அரசு’ என்று ஒன்று இருக்கிறதா என்று தெரியவில்லை. ஆட்சிப் பீடத்தில் ஒரு நத்தையை உட்கார வைத்திருந்தால் கூட அது அவ்வப்போது அசைந்து, கொஞ்சம் நகர்ந்து தன் இருப்பைக் காட்டியிருக்கும். அந்த அசைவு கூட இந்த அரசிடம் இல்லை.

ஒரே ஒரு விஷயத்தில் மட்டும் நடுவணரசிடம் புயல் வேகம் காணப்படுகிறது. அமெரிக்க வல்லரசு சொல்வதையெல்லாம் செய்து முடிப்பதிலும், அமெரிக்காவின் அடிபொடித் தொண்டனாகப் பணியாற்றுவதிலும் வேகம் குறையவில்லை.

அந்த அசைவற்றத் தன்மையும் ஆபத்து; இந்தப் புயல் வேகப் பாய்ச்சலும் ஆபத்து.

ஆபத்தில் இந்திய மக்கள்!

– சிராஜுல்ஹஸன்